4. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(ஆ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்–கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), அவை உரிமைக் குழு (Committee of Privileges) ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை 2017 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 30 ஆம் நாள், திங்கட்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவையில் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள், 2017 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 31 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2–00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2017 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 31 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை மாலை 5–00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

(இ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை/ஆட்சிக் குழு/கல்விக் குழு மற்றும் மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை (Senate), ஆட்சிக் குழு (Syndicate), கல்விக் குழு (Academic Council) மற்றும் மேலாண்மைக் குழுமம் (Board of Management) ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய அப்பல்கலைக்கழகங்களுக்கு நேர் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள எண்ணிக்கையிலான சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

[பேரவைத் தலைவர்] [2017 ஜனவரி 27

அழகப்பா பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	1 உறுப்பினர்
பாரதியார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	2 உறுப்பினர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	2 உறுப்பினர்கள்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	4 உறுப்பினர்கள்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	2 உறுப்பினர்கள்
பெரியார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	2 உறுப்பினர்கள்
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	2 உறுப்பினர்கள்
தமிழ்ப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	2 உறுப்பினர்கள்
சென்னைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	6 உறுப்பினர்கள்
அண்ணா பல்கலைக்கழகம் (ஆட்சிக் குழு)	1 உறுப்பினர்
அண்ணாமலை பல்கலைக்கழகம் (ஆட்சிக் குழு)	1 உறுப்பினர்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் (ஆட்சிக் குழு)	1 உறுப்பினர்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (மேலாண்மைக் குழுமம்)	1 உறுப்பினர்
தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் (மேலாண்மைக் குழுமம்)	1 உறுப்பினர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (மேலாண்மைக் குழுமம்)	1 உறுப்பினர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம் (கல்விக் குழு)	2 உறுப்பினர்கள்

2017 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்குள், அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் 15–12–2019 வரையாகும். எஞ்சிய பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலங்களாகும்.

தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்புத்தாளினை 30–1–2017 பிற்பகல் 2–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத்தாள்கள் 31–1–2017 பிற்பகல் 2–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 31–1–2017 பிற்பகல் 3–00 மணிக்குள் தங்களது வேட்புத்தாளினைத் திரும்பப் பெறலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்புத்தாள்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிற்பகல் 12–05

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். (குறுக்கீடு)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் தேர்வு குறித்து நீங்கள் சொல்லவில்லையே?